# காழ்ப்புணர்ச்சி பற்றி அ.தி.மு.க.வினர் பேசலாமா?

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கோவி. செழியன் சாடல்!



**சென்னை,ஏப்.25–**

**சட்டப் பேரவையில் நேற்று, அ.தி.மு.க. உறுப்பினர் பாலக்கோடு கே.பி. அன்பழகன், "உயர்கல்வி மற்றும் பள்ளிக்கல்வி" மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறுக்கிட்டு ஆதாரங்களுடன் விளக்கமளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், "காழ்ப்புணர்சி பற்றி அ.தி.மு.க.வினர் பேசலாமா? எனக் கடுமையாகச் சாடினார்.**

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏதோ காழ்ப்புணர்ச்சியாக செயல்படுகிறது; முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பெயரில் இருந்த, விழுப்புரம், கடலூர் மாவட்ட மாணவர்கள் பயன்பெற்ற பல்கலைக்கழகத்தை, கல்லூரியை இணைத்துவிட்டார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே இன்றைக்கு செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்களின் பெயரில், முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பெயரில், இசைப் பல்கலைக்கழகம் இருக்கிறது; மீன்வள பல்கலைக்கழகம் இருக்கிறது. அதற்குப் பெயர் ஒப்புதல்கூட தராமல், உங்கள் ஆட்சியில் போடப்பட்ட தீர்மானம் மேதகு Governor அவர்கள் மாளிகையில் உறங்கியது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்தான் உரிமைப் போராட்டம் நடத்தி அதைப் பெற்றுத் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் உறுப்பினர் அவர்கள், இதில் எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லை.

நான், முதலாம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக 2011 ஆம் ஆண்டு கன்னிப் பேச்சு பேசும்போது-இராணி மேரி கல்லூரியை மீட்ட தலைவர் இந்நாள் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய தினம் தலைமைச் செயலகம் கட்ட வேண்டுமென்று முடிவெடுத்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, இடிக்கும் நிலை ஏற்பட்டபோது போராடியதன் காரணமாக திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் 11 பேர் அன்றைக்கு கடலூர் சிறையில் இருந்தார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட அன்றைக்குச் சிறையில் இருந்தார். நான் சொல்ல வருகிற செய்தி, விரும்பி கலைஞர் அரங்கம் என்று ஓர் அரங்கத்தைக் கட்டினார்கள். கடற்கரை சாலைக்குச் சென்று பார்த்தால் கலைஞர் அரங்கம் என்று ஓர் அரங்கம் இருக்கும். ஆட்சி மாறியது, அந்த 'ஞர்' என்ற எழுத்து காணாமல்போய் வெறும் கலை அரங்கமாக இருந்தது. முதலமைச்சராக அம்மையார் அவர்கள் இருந்தார்கள். நான் கன்னிப்பேச்சு பேசும்போது சொன்னேன், கலைஞர் அரங்கம் என்பதை மாற்றிவிட்டு வெறும் கலை அரங்கமாக இருக்கிறதே! கலைஞர் என்றால் கசக்கிறதா? அந்தக் கல்லூரியில் இருந்த பெயரை ஏன் எடுத்தீர்கள் என்று கேட்டேன். கடைசி வரை கலைஞர் பெயர் வைக்கவில்லை.

மற்றொரு செய்தி, கடந்த காலங்களில் ரூ.18 கோடி செலவில், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் படம் பொறிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் பை, புத்தகப் பை இருந்தது. காழ்ப்புணர்ச்சி இல்லாத அரசு கழக அரசு என்பதற்காக இதைச் சொல்கிறேன். முன்னாள் அமைச்சர் அவர்களின் பேச்சில் குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை. அப்போது இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்களிடம் கருத்து கேட்டார்கள், துணை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டார்கள், அப்போது சொன்னார்கள் ஏழை எளிய மக்கள் தருகிற வரிப் பணத்தை வீணடிக்கக்கூடாது.

அம்மையார் அவர்களின் படம் இருந்தாலும் கவலை இல்லை, அதைத் தர வேண்டும் என்று சொன்ன தலைவர், நம்முடைய தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக, நாங்கள் வண்ணத் தொலைக்காட்சி வழங்கினோம், அதில் கலைஞர் அவர்களின் படம் இருந்தது. வண்ணத் தொலைக்காட்சி வழங்கினோம், கலைஞர் அவர்களின் படம் இருந்தது. எனவே, சில ஒன்றியங்களில் அவை வழங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஊராட்சி ஒன்றிய godown-ல் அவை இருந்தன. ஆட்சி மாறிய பிறகு, அதை வழங்குங்கள் என்று சொன்னபோது, கலைஞர் அவர்களின் பெயர் இருந்த காரணத்தால் வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்படாமல் godown-ல் பூட்டி வைத்ததும் கடந்த ஆட்சி தான் என்பதை நினைத்து, காழ்ப்புணர்ச்சி பற்றி பேசுவதற்குரிய உரிமை உறுப்பினர் அவர்களுக்கும், இயக்கத்திற்கும் உண்டா! காழ்ப்புணர்ச்சியைக் கடந்த தலைவர் எங்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் என்பதைப் பணிவோடு பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் குறிப்பிட்டார்.



தெலுங்கானா மாநிலம். ஹைதராபாத் சென்றுள்ள மேயர் ஆர். பிரியா தலைமையிலான குழுவினர் நேற்று (24.04.25) பெருநகர ஹைதராபாத் மாநகராட்சியில் ஜவஹர் நகரில் உள்ள குப்பை கழிவுகளை எரிபொருளாக மாற்றும் ஆலையின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பார்வையிட்டு கலந்துரையாடினர். இக்கூட்டத்தில், துணை மேயர் மகேஷ்குமார், ஆணையர் ஜெ. குமரகுருபரன், அதிகாரிகள் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, சீ. பாலச்சந்தர், டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் ஆர். ஜெயராமன், சு. ஜீவன், ஜெ. டில்லிபாபு, எம். ரேணுகா, ந. அதியமான், மோ. குணசுந்தரி, டாக்டர் பூர்ணிமா மற்றும் சென்னை ஹைதராபாத் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







அன்புடன் : அம்பத்தூர் கிழக்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க